## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C.)

# IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 206/2023 |
| Deposition of Witness | : | PW– 1 |
| Name | : | விக்னேஷ் |
| Father Name | : | மருதாச்சலம் |
| Village | : | திருப்பூர் |
| Taluk | : | திருப்பூர் |
| Age | : | 27 |

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 27.02.2026

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திருப்பூரில் குடியிருந்து வருகிறேன். கடந்த 05.02.2023 ஆம் தேதியன்று காலை திருப்பூர் பாண்டியன் நகரில் உள்ள எங்களது வீட்டில் இருந்து காங்கேயம் சிவன்மலை கோவிலுக்கு வரவேண்டி எனது அப்பா, அம்மா, எனது தங்கை அனிரூபா அவரது தோழி தர்ஷினி பிரியா மற்றும் எனது அத்தை தேவி அவரது மகன் லோகேஷ் ஆகியோர்கள் எங்களுக்கு சொந்தமான TN 39 BC 1324 என்ற பதிவு எண் கொண்ட ஆம்னி காரில் கோவிலுக்கு செல்லும்போ எனது அப்பா ஓட்டிச்சென்றார். பின்னர் கோவிலில் இருந்து புறப்பட்டு வெள்ளகோவிலில் உள்ள எங்களது உறவினர் திலீப் வீட்டிற்கு சென்றுவிட்டு மீண்டும் எங்களது வீட்டிற்கு வருவதற்காக வரும்போது வாகனத்தை லேகேஷ்வரன் வெள்ளகோவில் – காங்கேயம் செல்லும் சாலையில் பாலாஜி கம்பனி அருகே ஓட்டி வந்துகொண்டிருந்தபோது எதிரே வந்த கோவை – கும்பகோணம் வழிதடத்தில் செல்லக்கூடிய TN 68 1125 என்ற பதிவு எண் கொண்ட அரசு பேருந்து அதற்கு முன்பாக வந்த ஈச்சர் வாகனத்தை முந்திச்செல்ல முயற்சி செய்து வலது புறமாக ஏறிவந்தபோது எனது குடும்ப நபர்கள் வந்த வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே எனது அம்மா மற்றும் லோகேஷ்வரன் ஆகியோர்கள் இறந்துவிட்டதாகவும், எனது அப்பா, தங்கை அவரது தோழி மற்றும் அத்தை ஆகியோர்களுக்கு பலத்த காயம் ஏற்பட்டிருந்ததாகவும், அவர்களை சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ் மூலம் காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு

கூட்டிச்செல்வதாகவும், விபத்தை பார்த்த திலீப் குமார் எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். அந்த தகவலின் பேரில் நான் காங்கேயம் அரசு மருத்துமவனைக்கு சென்று பார்த்தபோது எனது அம்மா மற்றும் லோகேஷ்குமார் ஆகியோர்கள் இறந்துவிட்டார்கள். எனது அப்பா, அத்தை, தங்கை மற்றும் அவரது தோழி ஆகீயோர்களை முதலுதவி சிகிச்சை பெற்று பின்னர் மேல் சிகிச்சைக்காக சொந்த விருப்பத்தின்பேரில் கோவை கேஎம்சிகெச் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். சிகிச்சைக்கு செல்லும் வழியிலேயே எனது அத்தை தேவி இறந்துவிட்டார். விபத்தில் எனது அப்பாவிற்கு வலது காலில் எழும்பு முறிவு ஏற்பட்டிருந்தது மற்றும் தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. எனது தங்கைக்கு கால் மற்றும் தலையில் காயம் ஏற்பட்டிருந்தது. அவரது தோழிக்கும் தலை மற்றும் வலது காலில் காயம் ஏற்பட்டிருந்தது. பின்னர் வெள்ளகோவில் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகளைத்தான் போலீஸ் விசாரணையில் மற்றும் புகாரில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் அன்று எனது அப்பா, அம்மா, எனது தங்கை அவரது தோழி, அத்தை மற்றும் அவரது மகன் ஆகியோர்கள் எத்தனை மணிக்கு கோவிலுக்கு சென்றார்கள் என்றால் காலை 10.00 மணி இருக்கும். விபத்து நடந்த தகவல் எனக்கு எத்தனை மணிக்கு தெரிந்தது என்றால் காலை 11.00 மணிக்கு தெரிந்தது. விபத்து சமயத்தில் நான் எங்கிருந்தேன் என்றால் திருப்பூர் எனது வீட்டில் இருந்தேன். காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு எப்படி வந்தேன் என்றால் எனது உறவினருடன் காரில் வந்தேன். உறவினர்கள் யார்யார் வந்தோம் என்றால் எனது சித்தப்பா, சித்தி ஆகியோர்கள் வந்தோம். இந்த விபரத்தைத்தான் போலீஸ் விசாரணையில் மற்றும் புகாரில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். விபத்தில் அடிப்பட் அனைவரையும் கேஎம்சிகெச் மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு அனுப்பிவைத்தேன் என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் எத்தனை மணிக்கு புகார் கொடுத்தேன் என்றால் மதியம் சுமார் 1.00 மணி இருக்கும். புகாரில் எதிரே வந்த வாகனமானது வலது புறமாக ஏறிவந்து விபத்தை ஏற்படுத்தினார் என்று கூறியுள்ளேன்

என்றால் சரிதான். போலீஸ் விசாரணையில் முன்னால் சென்ற வாகனத்தை முந்தி செல்லும்போது விபத்து ஏற்பட்டது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். எந்த வாகனத்தை முந்திச்சென்றது என்ற விபரத்தை நான் கூறவில்லை என்றால் சரிதான். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்பதால் விபத்தானது யாருடைய அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்று கூறமுடியாது என்றால் சரிதான். சம்பவ சமயம் எனது உறவினர் திலீப் குமார் என்ன வேலைக்காக எங்களது வாகனத்திற்கு பின்னால் வந்தார் என்று போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. விபத்தை கண்ணுற்ற சாட்சிகள் காளிமுத்து மற்றும் சங்கீதா அவர்கள் எனது சித்தப்பா மற்றும் சித்தி ஆவார்கள். எனக்கு யார் போன் பன்னி தகவல் சொன்னார் என்றால் திலீப் குமார் ஆவார். விபத்தை பார்த்த சாட்சிகள் காளிமுத்து மற்றும் சங்கீதா ஆகியோர்கள் விபத்தை பார்த்த விபரத்தை போலீஸ் விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு முன்தினம் இரவு படுக்க தாமதம் ஆகிவிட்டது என்றால் சரியல்ல. ஆம்னி காரை லோகேஷ்குமார்தான் ஓட்டிச்சென்றார் என்று போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். கோவிலுக்கு செல்லும்போது எனது அப்பாதான் வாகனத்தை ஓட்டிசென்றார் என்ற விபரத்தை கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். லோகேஷ்குமார்தான் எதிரே வாகனம் வருவதை கவனிக்காமல் வலிய விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. இவ்விபத்திற்கு லோகேஷ்குமார்தான் காரணம் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்தவர்கள் எனது உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.02.27 19:13:28 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 206/202 |
| Deposition of Witness | : | PW– 2 |
| Name | : | மருதாச்சலம் |
| Husband Name | : | சவுண்டப்பன் |
| Village | : | திருப்பூர் |
| Taluk | : | திருப்பூர் |
| Age | : | 54 |

Accused present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 27.02.2026

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திருப்பூரில் குடியிருந்து வருகிறேன். கடந்த 05.02.2023 ஆம் தேதியன்று காலை திருப்பூர் பாண்டியன் நகரில் உள்ள எங்களது வீட்டில் இருந்து காங்கேயம் சிவன்மலை கோவிலுக்கு வரவேண்டி நான், எனது மனைவி, எனது மகள் அனிரூபா அவரது தோழி தர்ஷினி பிரியா மற்றும் எனது அக்கா தேவி அவரது மகன் லோகேஷ் ஆகியோர்கள் எங்களுக்கு சொந்தமான TN 39 BC 1324 என்ற பதிவு எண் கொண்ட ஆம்னி காரில் கோவிலுக்கு செல்லும்போது வாகனத்தை நான் ஓட்டிச்சென்றேன். பின்னர் கோவிலில் இருந்து புறப்பட்டு வெள்ளகோவிலில் உள்ள எங்களது உறவினர் திலீப் வீட்டிற்கு சென்றுவிட்டு மீண்டும் எங்களது வீட்டிற்கு வருவதற்காக வரும்போது வாகனத்தை லேகேஷ்வரன் ஓட்டிவந்தார். டிரைவர் இருக்கைக்கு அருகே இருந்த முன் சீட்டில் எனது மகளும் அவரது தோழியும் அமர்ந்திருந்தார்கள். பின் இருக்கையில் நானும், எனது மனைவி மற்றும் எனது அக்கா ஆகியோகள் அமர்ந்து பயணம் செய்தோம். பின்னர் வெள்ளகோவில் – காங்கேயம் செல்லும் சாலையில் வெள்ளமடை, பாலாஜி கம்பனி அருகே ஓட்டி வந்துகொண்டிருந்தபோது எதிரே வந்த கோவை வழிதடத்தில் செல்லக்கூடிய ஆஜர் எதிரி ஓட்டி வந்த அரசு பேருந்தை அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவாக ஓட்டிவந்து முன்பாக வந்த ஈச்சர் வாகனத்தை முந்திச்செல்ல முயற்சி செய்து வலது

புறமாக ஏறிவந்தபோது நாங்கள் சென்ற வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது. அந்த விபத்தில் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டிருந்தது. மேலும் வலது கால் எழும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. எனது மனைவியும், லோகேஷ் என்பவரும் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்கள். பின்னர் எனது மகள் மற்றும் அவரது தோழி மற்றும் எனது அக்கா ஆகியோர்களுக்கு பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. எங்களை சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ் மூலம் காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு கூட்டிச்சென்றார்கள். பின்னர் மருத்துவர்கள் மேல்சிகிச்சைக்காக திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்செல்ல பரிந்துரைத்தார்கள். ஆனால் நாங்கள் எங்களது சொந்த விருப்பத்தின் பேரில் கோவை கேஎம்சிகெச் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். சிகிச்சைக்கு செல்லும் வழியிலேயே எனது அக்கா தேவி இறந்துவிட்டார். எனது மகளுக்கு கால் மற்றும் தலையில் காயம் ஏற்பட்டிருந்தது. அவரது தோழிக்கும் தலை மற்றும் வலது காலில் காயம் ஏற்பட்டிருந்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

காரில் சீட் பெல்ட் உள்ளது என்றால் சரிதான். திருப்பூர் – சிவன்மலைக்கு நான் தான் வாகனத்தை ஓட்டிச்சென்றேன் என்ற விபரத்தை போலீஸ் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். கோவிலுக்கு செல்ல காலை எத்தனை மணிக்கு புறப்பட்டோம் என்றால் காலை 9.00 மணி இருக்கும். சிவன்மலைக்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் 10 மணிக்கு சென்றோம். கூட்டமாக இருந்ததால் கோவிலுக்கு செல்லவில்லை. கிறிவளம் சென்றோம். மேற்படி விபரத்தைதான் போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. சம்பத்தன்று கிரிவலம் பாதையில் நிறைய வண்டி வாகனங்கள் வந்ததால் கிரிவலம் முடிக்க சுமார் ஒன்றரை மணி ஆகிவிட்டது என்றால் இல்லை. நாங்கள் கிரிவலம் சுற்றும்போது அவ்வளவு வாகனங்கள் இல்லாததால் நாங்கள் 15 நிமிடத்தில் கிரிவலம் முடித்துவிட்டோம். கோவிலில் சுமார் எத்தனை மணி நேரம் தங்கிருந்தோம் என்றால் கிரிவலம் முடித்துவிட்டு உடனே கிளம்பிவிட்டோம். என்ன விஷயமாக திலீப்குமாரை பார்க்க சென்றோம் என்றால் உறவினர் முறையை பார்க்க செல்ல சென்றோம். விபத்து சமயத்தில்

தலையில் காயம் பட்டு இரத்தம் வழிந்துகொண்டிருந்ததால் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநரை சரியாக கவனிக்கவில்லை என்றால் இல்லை. நான் பார்த்தேன். உறவினரான திலீப்குமார் சம்பவ இடத்திற்கு எப்படி வந்தார், எதற்காக வந்தார் என்ற விபரம் தெரியாது என்றால் சரியல்ல. எனது மகள் திலீப்குமாருக்கு போன் செய்த விபரம் தெரியும். விபத்தின்போது பதட்டம் அதிகமாகிவிட்டது என்றால் சரிதான். அந்த சமயத்தில் யார் யார்க்கு என்ன காயம் ஏற்பட்டது என்று குறிப்பிட்டுச்சொல்லமுடியாது என்றால் சரிதான். காரில் வரும்போது எதிரே இருக்கையில் அமர்ந்தவரிடம் பேசிக்கொண்டு வந்தேன் என்றால் இல்லை. பேசிக்கொண்டு வந்ததால் எங்களுக்கு முன்னால் என்ன வாகனம் வந்தது என்று தெரியாது என்றால் நாங்கள் சென்ற வாகனத்தை ஓட்டிச்சென்ற லோகேஷ் பிரேக் போடும்போதுதான் எதிரே வந்த வாகனத்தை கவனித்தேன். போலீஸ் விசாரணையில் அரசு பேருந்தின் ஓட்டுநர் எந்த வாகனத்தை முந்திச்சென்று வந்தார் என்ற விபரத்தை சொல்லவில்லை என்றால் லாரி போன்ற பெரிய வாகனமாக இருந்தது. எந்த வாகனம் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சொல்லியிருக்கலாம். காளிமுத்து மற்றும் சங்கீதா என்ன உறவு முறை என்றால் காளிமுத்து எனது சகலை ஆவார். போலீசார் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் வீட்டில்வைத்து மற்றும் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். மற்றது எதுவும் எனக்கு ஞாபகம் இல்லை. எந்த நிலைக் காவல் அதிகாரி விசாரித்தார் என்றால் தற்போது எதுவும் எனக்கு ஞாபகம் இல்லை. விபத்து பற்றி தற்போது எந்த விபரமும் ஞாபம் இல்லை என்றால் சரியல்ல. சம்பவத்தன்று அதிகாலையில் எழுந்து கோவிலுக்கு சென்றதால் லோகேஷ்வரன் தூக்க கலக்கத்தில் எதிரே வந்த அரசு பேருந்து முந்திச்செல்வதை கவனிக்காமல் விபத்தை வலிய ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. விபத்து நஷ்ட ஈடு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. இறந்தவர் உறவினர் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.02.27 19:13:36 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 206/2023 |
| Deposition of Witness | : | PW– 3 |
| Name | : | அனிரூபா |
| Father Name | : | மருதாச்சலம் |
| Village | : | திருப்பூர் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 18 |

**Accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 27.02.2026

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திருப்பூரில் குடியிருந்து வருகிறேன். கடந்த 05.02.2023 ஆம் தேதியன்று காலை திருப்பூர் பாண்டியன் நகரில் உள்ள எங்களது வீட்டில் இருந்து காங்கேயம் சிவன்மலை கோவிலுக்கு வரவேண்டி நான், எனது அம்மா, அப்பா, எனது தோழி தர்ஷினி பிரியா மற்றும் எனது அத்தை தேவி அவரது மகன் லோகேஷ் ஆகியோர்கள் எங்களுக்கு சொந்தமான TN 39 BC 1324 என்ற பதிவு எண் கொண்ட ஆம்னி காரில் கோவிலுக்கு செல்லும்போது வாகனத்தை எனது அப்பா ஓட்டிச்சென்றார். பின்னர் கோவிலில் இருந்து புறப்பட்டு வெள்ளகோவிலில் உள்ள எங்களது உறவினர் திலீப் வீட்டிற்கு சென்றுவிட்டு மீண்டும் எங்களது வீட்டிற்கு வருவதற்காக வரும்போது வாகனத்தை எனது அத்தை பையன் லேகேஷ்வரன் ஓட்டிவந்தார். டிரைவர் இருக்கைக்கு அருகே இருந்த முன் சீட்டில் நானும், எனது தோழியும் அமர்ந்திருந்தோம். பின் இருக்கையில் எனது அப்பா, எனது அம்மா மற்றும் எனது அத்தை ஆகியோகள் அமர்ந்து பயணம் செய்தார்கள். பின்னர் வெள்ளகோவில் – காங்கேயம் செல்லும் சாலையில் வெள்ளமடை, பாலாஜி கம்பனி அருகே ஓட்டி வந்துகொண்டிருந்தபோது எதிரே கோவை வழிதடத்தில் செல்லக்கூடிய ஆஜர் எதிரி ஓட்டி வந்த அரசு பேருந்தை அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவாக ஓட்டிவந்து முன்பாக வந்த ஈச்சர் வாகனத்தை முந்திச்செல்ல முயற்சி செய்து வலது புறமாக ஏறிவந்தபோது நாங்கள் சென்ற வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது.

அந்த விபத்தில் எனது அப்பாவிற்கு தலையில் காயம் ஏற்பட்டிருந்தது. மேலும் வலது கால் எழும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. எனது அம்மா மற்றும் அத்தை மகன் லோகேஷ் ஆகியோர்கள் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்கள். பின்னர் நான் மற்றும் எனது தோழி மற்றும் எனது அத்தை ஆகியோர்களுக்கு பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. எங்களை சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ் மூலம் காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு கூட்டிச்சென்றார்கள். பின்னர் மருத்துவர்கள் மேல்சிகிச்சைக்காக திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்செல்ல பரிந்துரைத்தார்கள். ஆனால் நாங்கள் எங்களது சொந்த விருப்பத்தின் பேரில் கோவை கேஎம்சிஎச் மருத்துவமனைக்கு சென்றோம். சிகிச்சைக்கு செல்லும் வழியிலேயே எனது அத்தை தேவி இறந்துவிட்டார். எனக்கு கால் மற்றும் தலையில் காயம் ஏற்பட்டிருந்தது. எனது தோழிக்கும் தலை, முகம் மற்றும் வலது காலில் காயம் ஏற்பட்டிருந்தது. முகத்தில் கண்ணாடி சிதறல் உடைந்து குத்தியிருந்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

ஆம்னி கார் எங்களது சொந்த கார் என்றால் சரிதான். காரில் சீட் பெல்ட் உள்ளது என்றால் சரிதான். கோவிலுக்கு செல்ல காலை எத்தனை மணிக்கு புறப்பட்டோம் என்றால் நேரமாக கிளம்பிவிட்டோம். காலை 9.00 மணி இருக்கும். கூட்டமாக இருந்ததால் கோவிலுக்கு செல்லவில்லை. கிரிவலம் சென்றுவிட்டு கீழேயே சாமி கும்பிட்டுவிட்டு வந்துவிட்டோம். கிரிவலம் முடித்துவிட்டு உடனே கிளம்பிவிட்டோம். என்ன விஷயமாக திலீப்குமாரை பார்க்க சென்றோம் என்றால் எனது அத்தை மகன் லோகேஷ்க்கு கல்யாணம் முடிவுபன்னியிருந்தார்கள். அதுபற்றி பேச சென்றோம். இந்த விபரத்தை போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். சம்பவ இடத்திற்கு திலீப்குமார் எப்படி வந்தார் என்றால் நாங்கள் வீட்டில் இருந்தபோதே வேலையாக காங்கேயம் செல்வதாக வந்தார். நான் திலீப்குமாருக்கு விபத்தை பற்றி போன் மூலம் தகவல் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் அ.சா.1 எனது அண்ணன் விக்னேஷ்க்குதான் சொன்னேன். விபத்து ஏற்பட்ட உடனே பதற்றத்தில் என்ன நடந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். யார் யார்க்கு என்ன காயம் ஏற்பட்டிருந்தது என்ற விபரம் தெரியாது என்றால்

நான் பார்த்தேன். அப்போது தெரியாது. விபத்தானது பேருந்தின் வலது பக்கம் ஆம்னி காரின் மீது மோதி ஏற்பட்டது என்றால் சரிதான். அரசு பேருந்தின் ஓட்டுநர் எந்த வாகனத்தை முந்திச்சென்றார் என்ற விபரத்தை போலீஸ் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். பட்டியல் சாட்சி காளிமுத்து, சங்கீதா எனக்கு என்ன உறவு முறை என்றால் சித்தி மற்றும் சித்தப்பா ஆவார்கள். சம்பவத்தன்று அதிகாலையில் எழுந்து கோவிலுக்கு சென்றதால் லோகேஷ்வரன் தூக்க கலக்கத்தில் எதிரே வந்த அரசு பேருந்து முந்திச்செல்வதை கவனிக்காமல் அரசு பேருந்தின் வலது பக்கமாக மோதி விபத்தை வலிய ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் யார் யார் இருந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னை யார் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் போலீசார் காங்கேயம் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். காங்கேயம் போலீசார் வந்து விசாரித்தார்களா என்றால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் பிஎஸ்சி ஐடி இரண்டாம் ஆண்டு படித்து வருகிறேன். என்னை விசாரித்த போலீசார் பதவி என்ன என்றால் யார் என்று தெரியாது. லோகேஷ்வரன் அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்றும் நான் அதை மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நஷ்ட ஈடு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. இறந்தவர் உறவினர் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.02.27 19:13:43 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 206/2023 |
| Deposition of Witness | : | PW– 4 |
| Name | : | தர்ஷினி பரியா |
| Husband Name | : | சந்தோஷ்குமார் |
| Village | : | திருப்பூர் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 19 |

**Accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 27.02.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது திருப்பூரில் குடியிருந்து வருகிறேன். கடந்த 05.02.2023 ஆம் தேதியன்று காலை திருப்பூர் பாண்டியன் நகரில் உள்ள எங்களது வீட்டில் இருந்து காங்கேயம் சிவன்மலை கோவிலுக்கு வரவேண்டி எனது தோழி அனிரூபாவின் அப்பா, அவரது அம்மா, எனது தோழி அனிரூபா, நான் மற்றும் அனிரூபாவின் அத்தை தேவி அவரது மகன் லோகேஷ் ஆகியோர்கள் எங்களுக்கு சொந்தமான TN 39 BC 1324 என்ற பதிவு எண் கொண்ட ஆம்னி காரில் கோவிலுக்கு செல்லும்போது வாகனத்தை எனது அப்பா ஓட்டிச்சென்றார். பின்னர் கோவிலில் இருந்து புறப்பட்டு வெள்ளகோவிலில் உள்ள எனது தோழி அனிரூபாவின் உறவினர் திலீப் வீட்டிற்கு சென்றுவிட்டு மீண்டும் எனது தோழி வீட்டிற்கு வருவதற்காக வரும்போது வாகனத்தை அனிரூபாவின் அத்தை பையன் லேகேஷ்வரன் ஓட்டிவந்தார். டிரைவர் இருக்கைக்கு அருகே இருந்த முன் சீட்டில் நானும், எனது தோழி அனிரூபாவும் அமர்ந்திருந்தோம். பின் இருக்கையில் அனிரூபாவின் அப்பா, அம்மா மற்றும் அத்தை ஆகியோகள் அமர்ந்து பயணம் செய்தார்கள். பின்னர் வெள்ளகோவில் – காங்கேயம் செல்லும் சாலையில் வெள்ளமடை, பாலாஜி கம்பனி அருகே ஓட்டி வந்துகொண்டிருந்தபோது எதிரே கோவை வழிதடத்தில் செல்லக்கூடிய ஆஜர் எதிரி ஓட்டி வந்த அரசு பேருந்தை அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவாக ஓட்டிவந்து முன்பாக வந்த ஈச்சர் வாகனத்தை முந்திச்செல்ல முயற்சி செய்து வலது புறமாக ஏறிவந்தபோது நாங்கள்

சென்ற வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது. அந்த விபத்தில் அனிருபாவின் அப்பாவிற்கு தலையில் காயம் ஏற்பட்டிருந்தது. மேலும் வலது கால் எழும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. அனிரூபாவின் அம்மா மற்றும் அத்தை மகன் லோகேஷ் ஆகியோர்கள் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்கள். பின்னர் நான் மற்றும் எனது தோழி மற்றும் அவரது அத்தை ஆகியோர்களுக்கு பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. எங்களை சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ் மூலம் காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு கூட்டிச்சென்றார்கள். பின்னர் மருத்துவர்கள் மேல்சிகிச்சைக்காக திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்செல்ல பரிந்துரைத்தார்கள். ஆனால் நாங்கள் எங்களது சொந்த விருப்பத்தின் பேரில் கோவை கேஎம்சிகெச் மருத்துவமனைக்கு சென்றோம். சிகிச்சைக்கு செல்லும் வழியிலேயே அனிரூபாவின் அத்தை தேவி இறந்துவிட்டார். அனிரூபாவிற்க்கு கால் மற்றும் தலையில் காயம் ஏற்பட்டிருந்தது. எனக்கும் தலை, முகம் மற்றும் வலது காலில் காயம் ஏற்பட்டிருந்தது. முகத்தில் கண்ணாடி சிதறல் உடைந்து குத்தியிருந்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் பிடெக் படித்துள்ளேன். முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகளைத்தான் போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். சாட்சி சொல்ல வந்தபோது போலீசார் இந்த மாதிரி சம்பவம் நடந்ததாக சொல்லும்படி கூட்டிவந்தார்கள் என்றால் இல்லை. கோவிலுக்கு செல்ல காலை எத்தனை மணிக்கு புறப்பட்டோம் என்றால் நேரமாக கிளம்பிவிட்டோம். காலை 9.00 மணி இருக்கும். எத்தனை மணிக்கு சிவன்மலையில் இருந்தோம் என்றால் 10 மணி இருக்கும். கூட்டமாக இருந்ததால் கோவிலுக்கு செல்லவில்லை. கிரிவலம் சென்றுவிட்டு கீழேயே சாமி கும்பிட்டுவிட்டு வந்துவிட்டோம். கிரிவலம் முடித்துவிட்டு உடனே கிளம்பிவிட்டோம். மேற்படி விஷயத்தை போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். சிவன்மலையில் எத்தனை மணி நேரம் இருந்தோம் என்றால் 10.20 மணியளவில் கிளம்பிவிட்டோம். சிவன்மலையில் இருந்து வெள்ளகோவிலுக்கு 20 நிமிடத்தில் சென்றுவிட்டீர்களா என்றால்

10.45 மணி இருக்கம் சரியாக தெரியவில்லை. சிவன்மலையில் இருந்து வெள்ளகோவில் எத்தனை கிலோமீட்டர் என்றால் தெரியாது. அங்கு வீட்டில் எத்தனை மணிநேரம் இருந்தோம் என்றால் 05 – 10 நிமிடம் இருந்தோம். என்ன விஷயமாக திலீப்குமார் வீட்டிற்கு சென்றோம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சம்பவத்தின்போது திலீப்குமார் சம்பவ இடத்தில் இல்லை என்றால் அவர் வந்து கொண்டிருந்தார். எங்கு வந்துகொண்டிருந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. அனிரூபாவின் உறவினரான காளிமுத்து, சங்கீதாவை எனக்கு தெரியாது என்றால் சரிதான். அரசு பேருந்து ஓட்டுனர் எந்த வாகனத்தை முந்திச்சென்றார் என்ற விபரத்தை போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் ஈச்சர் வண்டி என்று சொல்லியுள்ளேன். சம்பவத்தன்று அதிகாலையில் எழுந்து கோவிலுக்கு சென்றதால் லோகேஷ்வரன் தூக்க கலக்கத்தில் எதிரே வந்த அரசு பேருந்து முந்திச்செல்வதை கவனிக்காமல் அரசு பேருந்தின் வலது பக்கமாக மோதி விபத்தை வலிய ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் காங்கேயம் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். எந்த போலீசார் எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. அதற்கு பின்னிட்டு யாரேனும் விசாரித்தார்களா என்றால் இல்லை. லோகேஷ்வரன் தனக்கு தானே விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றும் அவரை காப்பாற்றவேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நஷ்ட ஈடு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் யார் யார் இருந்தார்கள் என்ற விபரம் தெரியாது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.02.27 19:13:52 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 206/2023 |
| Deposition of Witness | : | PW– 5 |
| Name | : | திலீப்குமார் |
| Father Name | : | தங்கவேல் |
| Village | : | வெள்ளகோவில் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 36 |

Accused present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 27.02.2026

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது வெள்ளகோவிலில் குடியிருந்து வருகிறேன். கடந்த 05.02.2023 ஆம் தேதியன்று காலை 9.00 மணிக்கு எனது சித்தப்பா முறையான மருதாச்சலம் மற்றும் அவரது சித்தி பிரமிளா, அவரது மகள் அனிரூபா, அனிரூபாவின் தோழி பிரியதர்ஷினி எனது அத்தை தேவகி மற்றும் அவரது மகன் லோகேஷ் ஆகியோர்கள் திருப்பூர் பாண்டியன் நகரில் உள்ள எனது சித்தப்பாவின் வீட்டில் இருந்து காங்கேயம் சிவன்மலை கோவிலுக்கு வந்துவிட்டு பின்னர் வெள்ளகோவிலில் உள்ள எங்களது வீட்டிற்கு காலை 10.30 மணி சுமாருக்கு அவர்களது ஆம்னி காரில் வந்தார்கள். பின்னர் வீட்டிற்கு வந்து நலம் விசாரித்துவிட்டு ஒரு 10–15 நிமிடத்திலேயே எங்களது வீட்டில் இருந்து திருப்பூர் செல்லவேண்டி ஆம்னி காரில் கிளம்பிவிட்டார்கள். அந்த சமயத்தில் எனது சொந்த வேலை காரணமாக காங்கேயம் வரவேண்டி நான் எனது இருசக்கர வாகனமான பஜாஜ் பைக்கில் புறப்பட்டேன். ஆம்னி காரை லோகேஷ் ஓட்டிச்சென்றார். டிரைவர் இருக்கைக்கு அருகே இருந்த முன் சீட்டில் அனிரூபாவும், அவரது தோழி தர்ஷினிபிரியாவும் அமர்ந்திருந்தார்கள். டிரைவர் சீட்டின் பின் இருக்கையில் அத்தை அதற்கு எதிரே இருந்த சீட்டில் பிரிமிளாவும், சித்தப்பா மருதாச்சலமும் அமர்ந்திருந்தார்கள். பின்னர் வெள்ளகோவில் – காங்கேயம் செல்லும் சாலையில் வெள்ளமடை, பாலாஜி கம்பனி அருகே எனது சித்தப்பா காரை ஓட்டி

வந்துகொண்டிருந்தபோது எதிரே கோவை – கும்பகோணம் வழிதடத்தில் எதிரி ஓட்டி வந்த TN 68 N 1152 என்ற பதிவு எண் கொண்ட அரசு பேருந்தை வேமகாவும், அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவாக ஓட்டிவந்து முன்பாக வந்த ஈச்சர் வாகனத்தை முந்திச்செல்ல முயற்சி செய்து வலது புறமாக ஏறிவந்து எனக்கு முன்னால் சென்றுகொண்ருந்த ஆம்னியின் வலது புறத்தில் பேருந்தின் வலது புறம் மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது. விபத்து சமயத்தில் ஆம்னி காருக்கு பின்னால் சுமார் 200 அடி தூரத்தில் வந்துகெண்டிருந்தேன். விபத்தை பார்த்தவுடம் பதட்டம் ஆகிவிட்டது. உடனே எனது வாகனத்தை விட்டு விட்டு சென்று பார்த்தேன். பேருந்தில் இருந்த பயணிகளும் இறங்கிவந்தார்கள். அருகே சென்று பார்த்தபோது ஆம்பினியின் வலது புறம் முழுவதுமாக நசுங்கியிருந்தது. அதில் டிரைவர் சீட்டில் இருந்த லேகேஷ்க்கு பலத்த காயம் ஏற்பட்டு எந்த வித அசைவும் இன்றி இருந்தார். அனிரூபாவிற்க்கு கால் மற்றும் தலையில் காயம் ஏற்பட்டிருந்தது. அவரது தோழிக்கு தலை, முகம் மற்றும் வலது காலில் காயம் ஏற்பட்டிருந்தது. முகத்தில் கண்ணாடி சிதறல் உடைந்து குத்தியிருந்தது. எனது சித்தி பிரமிளாவிற்கு முகம் முழுவதும் நசுங்கி சேதமடைந்ததிருந்தது. எனது சித்தப்பா மருதாச்சலத்துக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. எனது அத்தைக்கு பின்னந்தலையில் அடிபட்டிருந்தது. பின்னர் தகவல் சொல்லி வரவழைக்கப்பட்ட ஆம்புலன்ஸில் காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு அனுப்வைத்துவிட்டு எனது தம்பி முறையான விக்னேஷ்க்கு போன் மூலம் தகவல் சொன்னேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தையும் போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். போலீசார் என்னை எத்தனை முறை விசாரித்தார் என்றால் இரண்டு முறை விசாரித்தார்கள். காங்கேயம் அரசு மருத்துவமனையில் வைத்து ஒரு முறையும், காவல் நிலையத்தில் வைத்து ஒரு முறையும் விசாரித்தார்கள். OE மில்லில் பிட்டராக பணிபுரிந்து வருகிறேன். எத்தனை மணிக்கு சென்று எத்தனை மணிக்கு வருவேன் என்றால் காலை 8.00–இரவு 8.00 மணியாகும். விடுமுறை மாதம் மூன்று நாட்கள் ஆகும். சந்தை கூடும் நாட்களில் விடுமுறை எடுக்கமுடியாது என்றால் தேவைப்படும்போது விடுப்பு எடுத்துக்கொள்ளலாம். விபத்தில் பாதிக்கப்பட்ட நபர்கள் எங்கள் வீட்டிற்கு எத்தனை மணிக்கு வந்தார்கள்

என்றால் காலை 10.30 மணிக்கு வந்தார்கள். எவ்வளவு மணிநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள் என்றால் 10-15 நிமிடங்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். எங்கள் வீட்டில் இருந்து எப்போது கிளம்பினார்கள் என்றால் 10.40 மணிக்கு புறப்பட்டார்கள். எந்த சொந்த வேலையாக காங்கேயம் வந்தேன் என்ற விபரத்தை போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். பேருந்து ஓட்டுநர் எந்த வாகனத்தை முந்திச்சென்றார் என்ற விபரத்தை கூறவில்லை என்றால் சரிதான். பட்டியல் சாட்சிகள் காளிமுத்து மற்றும் சங்கீதா ஆகியோர்கள் சம்பவத்தின்போது சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரிதான். மருதாச்சலம், அனிரூபா, தர்ஷினி பிரியா, அத்தைதேவி, ஆகியோர்களை காங்கேயம் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றுவிட்டு மேல் சிகிச்சைக்கு திருப்பூர் அனுப்பிவைத்தபோதுதான் விக்னேஷ்க்கு போன் மூலம் தகவல் சொன்னேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் வைத்தே சிகிச்சைக்கு அனுப்பிவைத்துவிட்டு தகவல் சொன்னேன். விக்னேஷ்க்கு தகவல் சொல்லும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் 11.00 மணி இருக்கும். காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு வரவில்லை என்றால் சிறிதுநேரம் காலதாமதமாக வந்தேன். அ.சா.1 விக்னேஷ் எத்தனை மணிக்கு காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எத்தனை மணிக்கு புகார் கொடுக்க சென்றார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சுமார் மதியம் 1.00-1.30 இருக்கும். நான், அ.சா.1 விக்னேஷ், எனது நண்பர் சுதர்ஷன், பிரகாஷ் காவல் நிலையம் சென்றோம். எதில் சென்றோம் என்றால் காரில் சென்றோம். யாருடைய காரில் சென்றோம் என்றால் உறவினரின் காரில் சென்றோம். காவல் நிலையத்தில் வைத்து நான்குபோரையும் விசாரித்து வாக்குமூலம் பெற்றுக்கொண்டார்களா என்றால் பெற்றுக்கொண்டார்கள். எங்களை விசாரித்து வாக்குமூலம் பெற்றது யார் என்றால் உதவி ஆய்வாளர் அர்ஜீனன் ஆவார். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், அடிபட்டவர் உறவினர் என்ற முறையில் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் நேரில் பார்த்தேன். விபத்தின்போது பேருந்தின் வலதுபக்க மூளையில் அடிப்பட்டது என்றால் சரிதான். அரசு பேருந்து ஓட்டுனர் எந்த வாகனத்தை முந்திச்சென்றார் என்ற விபரத்தை போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் ஈச்சர் வண்டி என்று சொல்லியுள்ளேன். சம்பவத்தன்று அதிகாலையில் எழுந்து கோவிலுக்கு

சென்றதால் லோகேஷ்வரன் தூக்க கலக்கத்தில் எதிரே வந்த அரசு பேருந்து முந்திச்செல்வதை கவனிக்காமல் அரசு பேருந்தின் வலது பக்கமாக மோதி விபத்தை வலிய ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. பஸ்ஸானது வெள்ளை கோட்டை தாண்டி வந்துதான் ஆம்னி காரில் மோதி விபத்தை ஏற்படுத்தியது. நான் சொல்வதுபோல் விபத்தை ஏற்படுத்திய பேருந்தானது வெள்ளைகோட்டை தாண்டி வந்திருந்தால் நேருக்கு நேர் மோதி விபத்தை ஏற்படுத்தியிருக்கும் என்றால் ஈச்சர் வாகனத்தை பேருந்து திடீரென முந்திச்செல்ல முயன்றபோது ஆம்னியும் வந்துகொண்டிருந்ததால் வலது புறம்தான் மோதி விபத்து ஏற்பட்டது. சாலையின் நடுவே போடப்பட்டிருந்த சென்டர் மீடியன் கோடு இடைவெளி விட்டு போடப்பட்டிருந்தது என்றால் சரிதான். விபத்திற்கு காரணம் இறந்துபோன லோகேஷ்தான் என்றால் சரியல்ல.ஆம்னி காருக்கு சீட் பெல்ட் இருந்ததா என்றால் இருந்தது. இவ்வழக்கு விபத்தை நேரில் பார்க்காமல் பார்த்ததுபோல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI Digitally signed by D THENMOZHI Date: 2026.02.27 19:14:00 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்